நீதிமன்ற படிவ எண்.53
(விதி 42ஐ காண்க)
<u>சாட்சியின் சான்றுரை</u>
(கு.வி.மு.ச., அத்தியாயம் XXIII)
தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தேனி.

S.C.No. 45/2025

<u>அ.த.சா: 2 (LW–3 )சாட்சியின் சான்றுரை</u>

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சின்னப்பாண்டி | சாதி | : | |
| தந்தை பெயர் | : | | தொழில் | : | |
| கிராமம் | : | | மதம் | : | |
| வட்டம் | : | | வயது | : | |

03–08–2026 நாளன்று 1969ம் ஆண்டு உறுதிமொழிச் சட்டம் (மையச் சட்டம் 44/1969) இன் வகைமுறைகளுக்கு உட்பட்டு உளமாற உறுதியளிக்கப்படுகிறது.
--------------------------------------------------------------

(எதிரிகள் ஆஜர்,

சாட்சி இன்று அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

<u>முதல் விசாரணை:</u> தொடங்கப்பட்ட நேரம் : 2.43 பி.ப.

நான் தற்போது கடமலைக்குண்டு காவல் நிலையத்தில் தலைமைக்காவலராக பணியாற்றி வருகிறேன். கடந்த 17.05.2024 ம் தேதி காலை 6.30 மணியவில் நான் கடமலைக்குண்டு காவல் நிலையத்தில் முதல்நிலைக்காவலராக பணிபுரிந்தபோது நான் மற்றும் சார்பு ஆய்வாளர், முதல்நிலைக்காவலர் 814 திரு. ராஜா, முதல்நிலைக்காவலர் 432 சுந்தர்ராஜ் ஆகியோர்கள் புகயிலை வழக்கு சம்மந்தமாக காவல் நிலையத்தில் இருந்து காலை 6.30 மணியளவில் புறப்பட்டு 6.45 மணிக்கு பெயர் விலாசம் கேட்டுத் தெரிந்த ஆஜர் எதிரி கணேஷ்குமார், த.பெ.சக்திவேல் அரச மரத்தெரு, கடமலைக்குண்டு என்பவரின் வீட்டிற்கு சென்று எங்களை முறைப்படி அறிமுகம் செய்துகொண்டு தமிழக அரசால் தடைசெய்யப்பட்ட புகையிலை வைத்திருப்பதாக

தகவல் வந்ததக அவரிடம் கூறி அவர் வீட்டை சோதனை செய்தபோது வீட்டு முன்வாசலில் 3 வெள்ளைநிற சாக்குமூட்டைகள் இருந்தன. அந்த சாக்கு மூட்டைகளை சோதனை செய்தபோது 225 கிராம் எடையுள்ள 55 கிராம் பெரிய பண்டல்களில் Hans புகையிலை வெள்ளை நிற சாக்கு பையில் இருந்தது. 20 பண்டல்கள் மற்றொரு சாக்கு பையில் Hans புகையிலை இருந்தது. மொத்தம் 16.875 கிலோ கிராம் Hans புகையிலை இருந்தது. 15 கிராம் எடைகொண்ட 1125 சிறிய Hans புகையிலை பாக்கெட்டுகள் இருந்தது. 100.8 கிராம் எடையுள்ள 27 கூல் லிப் பாக்கெட்டுகள் மற்றொரு வெள்ளை சாக்கு பையில் இருந்தது. மொத்தம் 2.721 கிலோ கிராம் இருந்தது. 15 கிராம் எடைகொண்ட Hans புகையிலையை ஒரு சிறிய பாக்கெட்டில் மாதிரிக்காக எடுத்து S1 என குறியீடு செய்யப்பட்டு அதில் விபரம் எழுதி ஒட்டப்பட்டது. 12.5 கிராம் எடைகொண்ட கூல் லிப் பாக்கெட்டுகளில் ஒரு சிறிய பாக்கெட்டில் மாதிரிக்காக எடுத்து S2 என குறியீடு செய்யப்பட்டு அதில் விபரம் எழுதி ஒட்டப்பட்டது. மீதமுள்ள 1124 Hans பாக்கெட்டுகள் மற்றும் 12.6 கிலோ கிராம் எடையுள்ள 215 கூல் லிப் பாக்கெட்டுகள் அதை வெள்ளை நிற சாக்கில் வைத்து 8.30 மணியளவில் அதை கைப்பற்றி சார்பு ஆய்வாளர் அத்தாட்சி தயார் செய்தார். அ.சா.ஆ.2 ஆன அத்தாட்சியில் இருக்கும் 3வது கையொப்பம் என்னுடையது தான். எதிரியை 7.15 மணிக்கு தமிழக அரசால் தடைசெய்யப்பட்ட புகையிலை வைத்ததால் அவரை கைது செய்தார். 8.30 மணிக்கு எதிரியிடம் புகையிலை சம்மந்தமாக விசாரணை செய்து அவரிடம் ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்தார். தனிநபர்கள் சாட்சிகள் யாரும் முன்வராததால் போலிசார் முன்னிலையில் எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தை சார்பு ஆய்வாளர் பதிவு செய்தார். எதிரி கணேஷ் குமார் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் இருக்கும் 3வது கையொப்பம் என்னுடையது தான். அந்த கையொப்பம் **அ.சா.ஆ.15** ஆகும். எதிரியிடமும் ஒப்புதல் வாக்குமூலத்தில் கையொப்பம் பெற்றார். பின்னர் 1வது எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் காலை 9.30 மணியளவில் உப்பு ஓடைத்தெருவைச் சேர்ந்த காந்தி மகன் மகாலிங்கம் என்பவர் வீட்டிற்கு சென்று மகாலிங்கம் என்பவரிடம் புகையிலை சம்மந்தமாக விசாரணை செய்து மகாலிங்கம்

வீட்டில் இருந்த 3 வெள்ளை நிற சாக்குமூட்டைகளை தானாக முன்வந்து ஒப்படைத்தார். மேலும் வெள்ளைநிற சாக்குபையை சோதனை செய்தபோது 225 கிராம் எடைகொண்ட 55 பண்டல் கொண்ட 165 Hans புகையிலை பாக்கெட்டுகள், 15 கிராம் எடை கொண்ட 2475 பாக்கெட்டுகள் மொத்தம் 37.168 கிலோ கிராம் இருந்தது. போலிசார் சாட்சிகள் முன்னிலையில் 15 கிராம் எடையுள்ள புகையிலை பாக்கெட்டை எடுத்து S3 என குறியீடு செய்யப்பட்டு விபரங்கள் எழுதி ஒட்டப்பட்டது. மீதமுள்ள Hans பாக்கெட்டுகளை அதே வெள்ளைச் சாக்குபையில் வைத்து அத்தாட்சி தயார் செய்தார். அ.சா.ஆ.3 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ள 3வது கையொப்பம் என்னுடையது தான். காலை 10.00 மணியளவில் தமிழக அரசால் தடைசெய்யப்பட்ட நச்சுப்பொருளான புகையிலையை குற்றம் என தெரிந்தே விற்பனைக்காக வைத்திருந்ததால் அவரை கைது செய்து 10.15 மணியளவில் வழக்கு சொத்துக்களை கைப்பற்றி சார்பு ஆய்வாளர் அத்தாட்சி தயார் செய்தார். 1வது எதிரியின் வாக்குமூலத்தின் அடிப்படையில் உப்பு ஓடைத் தெருவைச் சேர்ந்த பால்சாமி மகன் வேல்முருகன் என்பவரின் வீட்டை சோதனை செய்ய சென்றபோது அவர் வீட்டில் இல்லாததால் காலை 11.30 மணியளவில் எதிரிகள் கணேஷ்குமார், மகாலிங்கம் மற்றும் கைப்பற்றப்பட்ட சொத்துக்களை கடமலைக்குண்டு காவல் நிலையம் வந்து கு.எண்.176/2024 வழக்கு பதிவுசெய்ய சார்பு ஆய்வாளருக்கு உதவியாக இருந்தோம். பின்னர் மீண்டும் கடமலைக்குண்டு காவல் நிலையத்தில் இருந்து 13.00 மணிக்கு சார்பு ஆய்வாளர் சாட்சிகளான நான், முதல்நிலைக் காவலர் சுந்தர்ராஜ், முதல் நிலைக்காவலர் ராஜா அகியோருடன் ஜி உசிலம்பட்டியைச் சேர்ந்த சுப்பு க வுண்டர் மகன் பால்பாண்டி என்பவர் வீட்டிற்கு சென்று புகையிலை சம்மந்தமாக சோதனை செய்தபோது தன் கடையில் வைத்திருந்ததை தானாக முன்வந்து 5 வெள்ளை நிற சாக்குமூட்டைகளை ஒப்படைத்தார். சாக்குமூட்டைகளை சோதனை செய்தபோது 225 கிராம் எடையுள்ள 55 பெரிய பண்டல்கள் 275 Hans பாக்கெட்டுகள் 15 கிராம் எடைகொண்ட 4125 பாக்கெட்டுகள் 61.121 கிலோ கிராம் எடையுள்ள Hans பாக்கெட்டுகள் இருந்தது. மேற்படி தமிழக அரசால் தடைசெய்யப்பட்ட நச்சுத்தன்மை

கொண்ட போதைப்பொருளை குற்றம் என தெரிந்தும் விற்பனைக்காக வைத்திருந்ததால் 13.25 மணிக்கு எதிரி பால்பாண்டியை கைது செய்து 13.30 மணியளவில் அத்தாட்சியில் கைப்பற்றி சார்பு ஆய்வாளர் போலிஸ் சாட்சிகளான எங்களிடம் கையொப்பம் பெற்றார். அ.சா.ஆ.4 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ள அத்தாட்சியில் உள்ள 3வது கையொப்பம் என்னுடையது தான். 15.00 மணிக்கு எதிரி பால்பண்டி மற்றும் சொத்துக்களுடன் காவல்நிலையம் வந்து சார்பு ஆய்வாளருக்கு உதவியாக இருந்தோம். இது சம்மந்தமாக சார்பு ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார். சாட்சி எதிரிகள் பால்பாண்டி மற்றும் மகாலிங்கம் ஆகியோர்களை நீதிமன்றத்தில் ஆஜரில் இருந்த எதிரிகளில் சரியாக அடையாளம் காட்டினார்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:</u> –

முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த பின்பு தான் 4ம் எதிரி பால்பாண்டி வீட்டிற்கு சென்றேன் என்றால் சரிதான். எதிரி பால்பாண்டியிடம் இருந்து பெறப்பட்ட அத்தாட்சியில் குற்ற எண் எழுதப்பட்டிருந்ததா என்றால் எழுதப்பட்டிருந்தது. 1, 2, 4 எதிரிகளிடம் இருந்து பெறப்பட்ட ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சி யாரால் எழுதப்பட்டது என்றால் சார்பு ஆய்வாளரால் எழுதப்பட்டது. என்னிடம் காட்டப்படும் அ.சா.ஆ.2 முதல் அ.சா.ஆ.4 வரையிலான அத்தாட்சிகளில் உள்ள கையெழுத்து வெவ்வேறாக உள்ளது என்றால் சரிதான். 2 வது எதிரியிடம் இருந்து பெறப்பட்ட ஒப்புதல் வாக்குமூலத்தில் யார் யார் கையொப்பம் செய்தோம் என்றால் நான், சார்பு ஆய்வாளர், எதிரி மகாலிங்கம், 810 சின்னபாண்டி, 814 ராஜா, 432 சுந்தர்ராஜ் ஆகியோர் கையொப்பம் செய்தோம். அந்த 3 அத்தாட்சியிலும் Hans புகையிலை என்று தான் எழுதப்பட்டிருந்ததது என்றால் ஆமாம். Hans புகையிலை என்பது வேறு கணேஷ் புகையிலை என்பது வேறு என்றால் சரிதான். 4ம் எதிரி வீட்டிற்கு சென்றபோது அதை சுற்றி நிறைய வீடுகள் உள்ளது என்றால் சரிதான். ஆட்கள் அதிகம் வந்து செல்வரார்கள் என்றால் சரிதான். நானும் சார்பு ஆய்வாளரும் சென்றபோது கூட எதிரி

வீட்டிற்கு ஆட்கள் வந்தார்கள் என்றால் சரிதான். என்னை சார்பு ஆய்வாளர் விசாரித்தபோது 2ம் எதிரி மகாலிங்கத்திடம் இருந்து 10.35 அத்தாட்சி தயார் செய்யப்பட்டதாக சொல்லியுள்ளேன் என்றால் 10.30 மணி என்று சொல்லியுள்ளேன். ஆனால் என்னிடம் காட்டப்படும் அ.சா.ஆ.3 அத்தாட்சியில் 10.00 மணி என்று போடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நானும் மற்ற போலிசாரும் சம்பவ இடம் செல்லவில்லை என்றும் அத்தாட்சி தயார் செய்யவில்லை என்றும் எதிரிகளிடம இருந்து எந்த பொருளும கைப்பபற்றவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. சார்பு ஆய்வாளர் கேட்டுக்கொண்டதற்கிணங்க எதிரிகளுக்கு எதிராக பொய்யாக சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

விசாரணை முடிக்கப்பட்ட நேரம் : 3.23 பி.ப.

*Taken down by me/before me in open Court interpreted read over to the witness and admitted by the deponent to be correct.*

JAYASUDHA T S P

Digitally signed by JAYASUDHA T S P
Date: 2026.08.03 18:29:04 +0530

Chief Judicial Magistrate,
Theni
Date: 03-08-2025